**எம்பிலிபிடிய நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 28 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் எம்பிலிபிடிய நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் ரூபா 2,658,600 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு டெக்டர்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு குறித்துக் கொண்டேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி ரூபா 714,769 ஆன தொகை குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்குப் பதிய வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த வட்டியை கணக்குகளிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 2007 முதல் 2018 வரை 13 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,082,291 ஆன உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | குறித்த முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது |
| (ஆ) நிதிப்பிரமாணம் 571 | 2012 முதல் 2015 வரை கூட்டுத் தொகை ரூபா 574,629 ஆன கலப்பு வைப்பு, டெண்டர் பிணை, 10 சதவீத நிறுத்தற்பணம் மற்றும் வேலை ஒப்பந்த பிணை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்காமை | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | அவ்வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 25,500,993 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 36,526,973 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பில் போடப்பட்ட வருமானம் | 2018 சேர்க்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | 2017 பில் போடப்பட்ட வருமானம | 2017 சேர்க்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 18,056,000 | 17,749,272 | 17,749,272 | 41,072,688 | 18,206,000 | 18,329,258 | 16,053,437 | 37,300,469 |
| (ii) | வாடகை | 14,252,200 | 15,312,341 | 15,312,344 | 8,270,985 | 14,199,900 | 14,467,062 | 12,977,626 | 10,749,251 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,022,800 | 2,523,479 | 2,523,479 | - | 1,777,800 | 2,303,439 | 2,052,639 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 11,019,700 | 13,285,992 | 13,285,992 | 7,497,459 | 6,388,200 | 19,160,471 | 14,510,896 | 14,064,980 |

### 2.2.2 ஏனைய வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1,426 முட்சக்கர வண்டிகளிலிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய முட்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம் ரூபா 63,000 வை அறவிட சபைக்கு இயலாமலிருந்தது | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும் | இது தொடர்பாக முட்சக்கர வண்டி சங்க தவிசாளரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | பாதீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் எம்பிலிபிடிய நகரினுள் முட்சக்கர வண்டி தரிப்பிட கட்டணமாக ரூபா 250,800 சேர்க்க திட்டமிடப்பட்டிருந்த போதும், அந்த டென்டரை எவரும் எடுக்காததனால் அவ்வருமானம் இழக்கப்பட்டிருந்தது | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரிப்பது தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும் | 2018 ஆண்டிற்காக மோடார் வண்டி தரிப்பிட கட்டணம் அறவிட டென்டர் கோரப்பட்ட போதும், எவரும் முன் வந்திருக்கவில்லை. நகர சபைக்குரிய ஆளணி அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அப்பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 டிசம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் குறிகாட்டிகளை சரியாக இனங்கண்டு நீண்ட கால திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான 2019 முதல் 2022 வரையான நீண்ட கால திட்டம் 2019 பெப்ரவாரி 22 திகதி மகா சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வீத வரிக் குத்தகை அறவிடுவதற்காக அதிகார எல்லையில் எல்லா அசையும் சொத்துக்களும் 05 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட வேண்டிய போதும், 2012 ஆண்டின் பின்னர் சொத்து மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு முறை சொத்துக்கள் மதிப்பிடப்படுவதற்காக பொறுத்தமான வேலை ஒழுங்கொன்று திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் சொத்துக்களை மதிப்பீடு செய்து கொள்ள பிரதான மதிப்பீட்டாளருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன், 2019 ஆண்டில் அச் செயற்பாடுகளை மேற்கொள்வதாக மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது. |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2005 ஜுன் 01 திகதிய இலக்கம் 2005/04 கொண்ட ''ஒரு சில காணிகள் விற்பனையின் மீது வரி அறவிடல்'' தொடர்பான சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் 02(iv) பந்தி பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் 06 காணிகள் ஏலத்தில் விற்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையில் ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | 2019 ஆண்டு அவ்வாரான காணி பிரிக்கப்பட்டு விற்கையில் முறையாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளது. |

**3.4 முறையற்ற கொடுக்கள் வாங்கள்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எம்பிலிபிடிய நகர மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகார பழுதுபார்த்தல் பெறுகை வழிகாட்டிக் கோவையிற்கு மாற்றமாக மதிப்பீட்டு கிரயமான ரூபா 247,640 இற்கு நபரொருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஓப்பந்தக்காரருடன் எழுத்து மூல ஒப்பந்தம்மொன்றோ அல்லது கேள்வி பாதுகாப்போ இல்லாமல் 2017 மே 05 ஆம் திகதி ரூபா 150,000 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதும், பழுதுபார்த்தல் உரிய முறையில் செய்யப்படாததனால் மீளாய்வாண்டிடு இறுதி வரையும் கடிகாரம் செயலற்றதாக நிலவியது. | பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்ற வேண்டியமை. | இதற்காக திறந்த விலை மனு கோரப்பட்டிருந்த போதும், எவரும் முன் வந்கிருக்காத காரணத்தால் குறித்த ஒப்பந்தக் காரருக்கு பழுதுபார்த்தலை மேற்கொள்ளுமாறு அறிவித்து ரூபா 150,000 ஆன முற்பணம் வழங்கப்பட்டது. அக் கடிகாரத்தை பழுதுபார்த்ததன் பின்னர் சரியாக நேரத்தை காட்டிய போதும், சில நாட்களின் பின்னர் மீண்டும் செயலிழந்தது. மீண்டும் அதனை பழுதுபார்த்து தருமாறு பல கடிதங்கள் மூலம் அவரிற்கு அறிவித்த போதும், அச் செயற்பாட்டை மேற் கொள்ளாததனால் மீதி ரூபா 97,640 அவரிற்கு செலுத்தப்படவில்லை. |
| (ஆ) | 2007 ஆண்டின் போது முன்னால் தவிசாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த மோட்டார் சைக்கில் ஒன்று சபையின் பெயருக்கு மாற்றப்படாததனால் 2008 ஆண்டின் பின் வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள இயழாமலியிருந்தது. நீண்ட காலமாக பயன்படுத்தப்படாது இருந்தமையால் குறித்த மோட்டார் சைக்கில் செலுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. | மோட்டார் சைக்கிலின் உரிமையை சபையிற்கு சுவீகரித்துக்கொண்டு சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கையை விரைவில் எடுத்தல் வேண்டும். | பதிவுச் சான்றிதழ் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் முறைப்பாடொன்று முன்னால் தவிசாளரினால் இச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அப் பொலிஸ் முறைப்பாட்டுடன் மோட்டார் சைக்கிலை நகர சபைக்கு சுவீகரித்துக் கொள்ள தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 5,046,790 ஆன பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | 2020 ஆண்டிற்கு பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செலவுகள் மேற் கொள்ளப்படும் என மேலதிகமாக குறிப்பிட்டேன். |

### 3.5.2 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு வேலைகளிற்காக ரூபா 93,670 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், இன்னுமொறு வேலைக்காக ரூபா 9,689 தொகை மேற் கொள்ளப்படாத வேலைக்காக செலுத்தப்பட்டிருந்தது | வேலைகள் உரிய மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன், மேலதிக கொடுப்பனவை கழித்துக் கொள்ள வேண்டும். | நிறுத்தி வைக்கப்பட்ட பணத்திலிருந்து கழித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் 15 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 3,066,700 ஆன மொத்த ஏற்பாடுகளும் மீதியாக இருந்தன. | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்குவதற்கும் அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படும் போது விலகல்களை குறைத்துக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 22 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 59,547,200 ஆன மொத்த ஏற்பாட்டில் 38 முதல் 99.7 சதவீதம் வரை வீச்சலவான சதவீதமொன்று மீதியாக இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்குவதற்கும் அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படும் போது விலகல்களை குறைத்துக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் | 2019 ஆண்டின் முதல் காலாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டதுடன், எதிர் காலத்தில் மீதி குழுக்கள் நடாத்தப்படும் என அறிவிக்கின்றேன். |

## 4.3 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எம்பிலிபிடிய பஸ் தரிப்பிடத்தினால் 2014 ஆண்டு முதல் பஸ் வண்டி நிறுத்தற் கட்டணம் அறவிடப்படடிருக்கவில்லை. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வருமானத்தை அறவிடுவது தொடர்பாக பிரதான செயலாளர், பிரதான அமைச்சு செயலாளர் மற்றும் பயாணிகள் போக்குவரத்து அதிகார சபையுடன் தற்போதும் கூட கலந்துரையாடல் நடைபெற்றுக் காண்டிருக்கின்றது. |
| (ஆ) | 2014 பெப்ரவரி 21 திகதிய மகா சபை தீர்மானத்தின் படி நிலுவை வீத வரி சேகரிக்கும் அலுவலரிற்கு 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை கூட்டுத் தொகை ரூபா 237,012 ஆன தரகு பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டி இறுதியிளும் அவற்றில் ரூபா 150,506 திருப்பி அறவிடப்பட வேண்டியிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டடுள்ள பணத்தை விரைவில் அறவிட வேண்டும். | இத் தரகு பணத்தை செலுத்துகையில் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை திருப்பி செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. |